*மக்கள் ஆய்வகம்*

*வழங்கும்*

# சட்டமன்றத் தேர்தல் 2011

குறித்த

## மாநில அளவிலான

# கள ஆய்வு முடிவுகள்

*கள ஆய்வு நடந்த நாள்கள்:*

2011 மார்ச் 21-29

*ஊடகவியலார் சந்திப்பு:*

01 ஏப்ரல் 2011

## மக்கள் ஆய்வகம் வழங்கும்

# *தமிழகம் 2011:*

## மாநில அளவிலான கள ஆய்வு முடிவுகள்

### *ஆய்வகப் பின்னணி*

“மக்களை ஆய்வது மக்களுக்காகவே” என்ற கொள்கையுடன் மக்களை மையப்படுத்திய பல்துறை ஆய்வுகளையும் பரப்புரைகளையும் மேற்கொள்ளும் பணியில் பத்தாண்டுகளை நிறைவுசெய்துள்ளது *மக்கள் ஆய்வகம்.* மக்களின் உள்ளக்கிடக்கையை ஆய்வுப்பூர்வமாக அறிந்து, செயல்பூர்வமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியில், இதுவரை:

♦ தமிழக அளவில் 25-க்கும் மேற்பட்ட சுற்றுகள் பண்பாடு-அரசியல் தொடர்பான பேராய்வுகளையும்,

♦ தமிழகம், கர்நாடகம், கேரளா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நுகர்வோர் உளவியல் குறித்த ஆய்வுகளையும்,

♦ உடல்தேய்வு நோய் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த மாநில அளவிலான பரப்புரைகளையும்,

♦ ஆய்வுகளை அடியொற்றிய கலைப்படைப்பு உருவாக்கங்களையும்

மேற்கொண்டு வந்துள்ளது.

### *ஆய்வு அணுகுமுறை*

வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் களத்தில், அரசியல் கட்சிகள் தத்தமது பரப்புரைகளைத் தொடங்கியுள்ள சூழலில், மார்ச் 21 முதல் 29 வரை, பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில், களஆய்வு நடைபெற்றது. இந்த ஆய்வின் பல்வேறு நிலைகளில் பேராசிரியர்கள் மற்றும் களஆய்வு ஒருங்கிணைப்பாளர்கள் ஐந்து பேரும், திரைக்கலை மற்றும் அசைகலை மாணவர்கள் 24 பேரும் ஈடுபட்டனர். மறுவரையறை செய்யப்பட்ட தமிழகத்தின் அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும், மொத்தம் 117 சட்டமன்றத் தொகுதிகளில், 3171 பேரைச் சந்தித்துக் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழ்ப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, *பேரா. டாக்டர் ராஜநாயகம்* உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டது.

### *பங்கேற்றோர் பின்னணி*

களஆய்வில் பங்கேற்றோரில் மிகப் பெரும்பாலோர் (86.6) ஆண்கள். *வயதுரீதியாக,* வயது 18க்கு மேல் 20 வயது வரை - 3.4, வயது 21 முதல் 30 வரை - 26.3, வயது 31 முதல் 45 வரை 41.1, வயது 46 முதல் 60 வரை - 23.1, மீதி - வயது 61-க்கு மேல். *கல்வியைப் பொருத்த மட்டில்,* பெரும்பாலோர் (51.9) வகுப்பு 6 முதல் 12 வரை படித்துள்ளவர்கள். மற்றவர்களில், உயர்கல்வி - 21.0, வகுப்பு 5 வரை - 12.5, மீதி - படிக்காதவர்கள் / சொல்ல விரும்பாதோர்.

*தொழில்ரீதியாக,* பெரும்பாலோர் (41.6) சொந்தத் தொழில் செய்பவர்கள். மற்றவர்களில், விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் - 17.8, தனியார் நிறுவன ஊழியர் - 23.2, அரசு ஊழியர் - 5.9, மாணவர் - 4.4, இல்லத்தரசியர் - 1.2, மீதி - வேலையற்றோர் / வேறு வேலைகள்.

*சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 16.3, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 21.7, பிற்படுத்தப்பட்டோர் - 32.4 (மீதி - பிற இனத்தினர் / சொல்ல விரும்பாதோர்). *மதரீதியாக,* இந்து மதத்தினர் - 79.6, இஸ்லாமியர் - 6.9, கிறிஸ்தவர் - 3.6 (மீதி - பிற மதத்தினர் / சொல்ல விரும்பாதோர்).

## *தேர்தல் பிரச்சாரக் களம்*

*(1) தேர்தல் வியூகம்:*

அரசியல் கட்சிகளின் தேர்தல் வியூகத்தில், கீழ் வரும் பத்து அம்சங்களை எந்த அணி சிறப்பாகச் செயலாக்கி வருகிறது என்பதைக் குறித்து, கட்சி விருப்பு-வெறுப்புகளுக்கு அப்பால் மக்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள்:

| தேர்தல் வியூகம் | *திமுக அணி* | *அதிமுக அணி* |
|---|---|---|
| தேர்தல் அறிக்கை | 49.4 | 43.5 |
| சுமுகமான தொகுதிப் பங்கீடு | 44.7 | 32.4 |
| சரியான வேட்பாளர்கள் தேர்வு | 42.5 | 42.2 |
| உட்கட்சிப் பூசல்கள் இன்மை | 35.6 | 44.5 |
| சிறுபான்மையினர் ஆதரவு | 47.3 | 46.1 |
| டி.வி./பத்திரிக்கை விளம்பரம் | 49.0 | 39.9 |
| சுவர்/சுவரொட்டி/பேனர் | 24.5 | 27.8 |
| தெருமுனை/பொதுக் கூட்டம் | 35.2 | 32.3 |
| வாக்காளருடன் நேரடிச் சந்திப்பு | 32.4 | 36.8 |
| தலைவர்களின் பிரச்சாரம் | 45.6 | 43.2 |

மேற்கண்ட அம்சங்கள் பலவற்றில் திமுக அணியும், ஓரிரு அம்சங்களில் அதிமுக அணியும் முன்னிலை பெற்றுள்ளன. எனினும் எந்த அணியும் எந்த அம்சத்திலும் பாதி வாக்காளரின் ஆதரவைக் கூடப் பெறவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

*தேர்தல் பிரச்சாரக் களத்தில் தூக்கலாகத் தென்படும் அம்சங்கள்சில:*

(அ) சலுகைகள், இலவசங்கள் குறித்த கட்சிகளின் தேர்தல் "பிரகடணங்கள்" மக்களைத் திகட்டிப்போக வைத்துள்ளன.

(ஆ) அனைத்துத் தொகுதிகளிலும் அனைத்துக் கட்சிகளிலும் பூசல்கள் மலிந்துள்ளன. அவை சில சூழல்களில், சரிசெய்துவிடக்கூடிய மிதமான மனக் கசப்பாகவும், வேறு சில சூழல்களில் வெளிப்படையான எதிர்ப்பாகவும் வடிவம் பெற்றுள்ளன.

(இ) தேர்தல் ஆணையத்தின் கடுமையான செயல்பாடுகளால், வழக்கமாகத் தேர்தல் காலங்களில் காணப்படும் "திருவிழாச் சூழல்" எங்கும் காணப்படவில்லை. பல இடங்களில் வெளி மாநிலக் காவலர்களின் பிரசன்னத்தால் ஏதோ "தடை உத்தரவு" போடப்பட்டுள்ளது போல இறுக்கம் நிலவுகிறது.

(ஈ) சுவர் எழுத்து, சுவரொட்டி போன்றவற்றிற்குத் தேர்தல் ஆணையம் காட்டிவரும் கெடுபிடிகளால் சிறுகட்சிகளைச் சேர்ந்த / சுயேட்சை வேட்பாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான இடங்களில் அவர்களைக் குறித்த எந்த விவரமும் வாக்காளருக்குத் தெரியவில்லை. இதன் மற்றொரு முகமாக, தேர்தல் காலங்களில் கணிசமாகப் பொருளீட்டிய கிராமத்து ஓவியர்கள் இப்போது வாய்ப்பிழந்து நிற்பதைக் காண முடிகிறது.

*(2) நடுநிலை ஊடகம்:*

வரும் சட்டமன்றத் தேர்தலையொட்டிய செய்திகளை *நடுநிலையில்* தரும் ஊடகங்களைப் பற்றிய மக்களின் கருத்து:

*(அ) தொலைக்காட்சி:*

சன் - 30.5, பொதிகை - 7.1, ராஜ் - 6.7, சன் நியூஸ் - 5.8, மக்கள் - 3.5, எதுவுமில்லை - 31.4

*(ஆ) நாளிதழ்:*

தினத்தந்தி - 27.7, தினகரன் - 14.9, தினமலர் - 14.2, தினமணி - 7.6, எதுவுமில்லை - 30.7

*(இ) வார / வாரமிரு இதழ்:*

ஜூனியர் விகடன் - 7.6, நக்கீரன் - 7.2,

குமுதம் - 6.5, குங்குமம் - 6.3, ஆனந்த விகடன் - 6.3, எதுவுமில்லை - 61.6

மேற்கண்ட ஊடக வகை ஒவ்வொன்றிலும் நடுநிலைச் செய்தியைத் தருவதாக எதுவுமில்லை என்ற பதில் பிற பதில்களைவிட அதிகம் இருப்பது கவனத்திற்குரியது.

***(3) தேர்தல் அறம்:***

ஒரு வேட்பாளரிடம் பணம் வாங்கிக்கொண்டு அவருக்கு வாக்களிப்பது தவறு என மிகப் பெரும்பாலோர் (80.5) தெரிவித்தாலும், கடந்த தேர்தல்களில் ஒரு தடவையாவது தமக்குப் பணம் தரப்பட்டதாக ஒத்துக் கொள்வோர் எண்ணிக்கை கணிசமாக உள்ளது (47.9). மேலும், ஒருவரிடம் பணம் வாங்கிக்கொண்டு தான் விரும்பும் வேறொருவருக்கு வாக்களிப்பது தவறல்ல என ஏறத்தாழ மூன்றில் ஒருவர் (31.5) கருதுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. திமுக, அதிமுக அணிகளுக்கிடையே கடும் போட்டி நிலவும் சூழ்நிலையில் இத்தகையோரது வாக்கு முக்கியமானதாக அமையக்கூடும்.

***(4) தேர்தல் ஆணையம்:***

வரும் சட்டமன்றத் தேர்தலைப் பொருத்தவரை, தேர்தல் ஆணையம் மிகப் பொறுப்பாகப் பாரபட்சமற்றுச் செயல்படுவதாகப் பெரும்பாலோர் (60.5) தெரிவித்துள்ளனர். எனினும் ஏறத்தாழ நான்கில் ஒருவர் (24.7) அது தன்னுடைய அதிகார வரம்பை மீறிய கண்டிப்புடன் செயல்படுகிறது எனக் குறைபட்டுள்ளனர். அதன் செயல்பாடுகளில் நிறையக் குளறுபடிகள் உள்ளன (4.7) என்பது மற்றொரு குறிப்பிடத்தக்க பதில்.

## ***வாக்களிப்பது குறித்த மக்கள் கண்ணோட்டம்***

***(5) தொகுதியின் முக்கியப் பிரச்சனை:***

(அ) தங்கள் தொகுதியின் மிக முக்கிய பிரச்சனையாக மக்கள் முன்வைப்பதில் முதலிடம் பெறுபவை: மின்வெட்டு (25.2), விலைவாசி உயர்வு (14.2), குடிதண்ணீர் வசதி இல்லாதது (12.6), போக்குவரத்து வசதி இல்லாதது (9.6), ரேஷன் விநியோகம் சரியில்லாதது (8.5), தொழில் வளர்ச்சி இல்லாதது (5.3), மருத்துவ-சுகாதார வசதி இல்லாதது (5.1).

(ஆ) எந்த அணியின் வேட்பாளர் ஜெயித்தாலும் தங்கள் தொகுதியின் பிரச்சனை தீரப் போவதில்லை என்பது பெரும்பான்மைக் கருத்தாக (42.5) இருந்தாலும், திமுக மற்றும் அதிமுக அணிகளை ஒப்பிடும்போது, அதிமுக அணியால் முடியும் எனச் சற்று அதிகமானோர் கருதுகின்றனர் (திமுக அணி - 21.9, அதிமுக அணி - 33.7).

***(6) யாருக்கு வாக்கு...?***

தற்போதுள்ள அரசியல் சூழலில், இன்று வாக்களிப்பதாக இருந்தால் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பீர்கள் என்ற கேள்விக்கான பதில்:

| | |
|---|---|
| திமுக அணி | 41.7 |
| அதிமுக அணி | 48.6 |
| பிறர் | 1.5 |
| முடிவுசெய்யாதோர் | 8.2 |

***(7) ஆட்சியில் எந்த அணி...?***

வரும் தேர்தலில் அதிமுக அணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றும் எனக் கருதுவோர் 51.1 (அதிமுக தனித்து - 25.9, அணியாக - 25.2). திமுக-வுக்கு அந்த வாய்ப்பு இருப்பதாகக் கருதுவோர் 36.7 (திமுக தனித்து - 16.2, அணியாக - 20.5).

*(8) மதிமுக-வின் தேர்தல் புறக்கணிப்பின் தாக்கம்:*

மதிமுக தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்திருப்பதால் அதிகம் பாதிக்கப்படுவது அதிமுக அணி என்ற கருத்து நான்கில் ஒரு வாக்காளரால் (25.4) முன்வைக்கப்படுகிறது. எனினும், யாருக்கும் பெரிய அளவில் பாதிப்பு இருக்காது என்பதே பெரும்பான்மை (53.6) கருத்து. பிற பதில்கள்: மதிமுக-வுக்குத் தான் பாதிப்பு - 7.4, திமுக அணிக்கு - 3.8, மீதி - வேறு பதில்கள் / சொல்ல விரும்பாதோர்.

*(9) பொதுவான தொகுதி நிலவரம்:*

மாவட்டம் மற்றும் தொகுதி அளவிலான நிலவரங்களை நுணுகி ஆயும்பொழுது, கணிப்பு நடத்தப்பட்ட காலக் கட்டத்தில் (மார்ச் 21-29), ஐந்து விழுக்காட்டுக்கும் அதிகமான வாக்குகளுடன் அதிமுக அணிக்குச் சாதகமாக 105 தொகுதிகள் வரையும், திமுக அணிக்குச் சாதகமாக 70 தொகுதிகள் வரையும் உள்ளன. மீதமுள்ள 59 தொகுதிகளில் இரு அணிகளுக்குமிடையே கடுமையான போட்டி நிலவுகிறது. இத் தொகுதிகள் எந்த அணிக்குச் செல்லும் என்பது, இக் கணிப்பைத் தொடர்ந்த கால கட்டத்தில் நடைபெறும் நிகழ்வுகளைப் பொருத்து, குறிப்பாக, கீழ்வரும் *மூன்று காரணிகளின் கூட்டுச் செயல்பாட்டைப் பொருத்து* அமைந்திருக்கும்.

(அ) வாக்குப் பதிவுக்கு முன்பாக மதிமுக எடுக்கப்போகும் நிலைப்பாடு,

(ஆ) ஒவ்வொரு ஊரிலும் நடைபெற்றுவரும் மற்றொரு தினுசான “மும்முனைப் போட்டி”: தமக்குப் பணம் தரப்படும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கும் வாக்காளர்கள், எதிர்க் கட்சியினர் மற்றும் தேர்தல் ஆணையத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு வாக்காளரைக் “கவனிக்கத்” தவிக்கும் கட்சிகள், எப்பாடுபட்டாவது பணப்பட்டுவாடாவைத் தடுத்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டு திரியும் தேர்தல் ஆணையம் ஆகிய மும்முனைகளுக்கு இடையிலான போட்டியில் “ஜெயிக்கப் போவது யார்?” என்ற கேள்விக்கான பதில்,

(இ) பொதுவாக, அதிமுக அணியை விடத் தற்போது சிறப்பாக அமைந்துள்ளதாகக் கணிக்கப்படும் திமுக அணியின் தேர்தல் வியூகத்தின் அடுத்த கட்ட எழுச்சியும் வீச்சும்.

*(10) கருத்துக் கணிப்புகள் பற்றிய கணிப்பு:*

கருத்துக் கணிப்புக்கள், மக்களின் மனநிலையை அறிந்துகொள்ளவும் (64.8), வாக்காளர்கள் தெளிந்த முடிவெடுக்கவும் (21.1) உதவுவதாகப் பெரும்பாலோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். மக்களைக் குழப்புவதாகக் கணிப்புகள் உள்ளன (7.4), நடுநிலையான கணிப்பு மட்டுமே வரவேற்கத் தக்கது (4.2), ஆகியவையும் குறிப்பிடத்தக்க பதில்கள். கணிப்புகளை ஒட்டுமொத்தமாகத் தடைசெய்ய வேண்டும் என்போர் வெறும் 1.0 மட்டுமே.

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர்
மக்கள் ஆய்வகம்
01 ஏப்ரல் 2011

*கவனத்திற்கு:* மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன.

**நன்றி**

ஆய்வின் பல்வேறு நிலைகளில் பங்கேற்ற அனைவருக்கும்